# தேசிய பாதுகாப்பு அமைச்சு
# தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO)
# வெற்றிடங்கள்

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திலுள்ள பின்வரும் பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

## சிரேஷ்ட விஞ்ஞானி (பொறியியலாளர்) AR - 2 (சிவில்/கட்டமைப்பு) (01 பதவி)

**வெளிவாரி:**

**தகைமைகள்: (பின்வரும் 1 அல்லது 2)**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட இயைபான துறையில் சிவில் பொறியியலில் நான்கு வருட சிறப்பு இளமாணிப் பட்டம்.

மற்றும்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானத்தில் சிவில் மற்றும் கட்டமைப்பு பொறியியலில் பட்டப் பின்படிப்புத் தகைமை (Master's) அல்லது இலங்கை பொறியியல் நிறுவனத்தின் (IESL) (பட்டய பொறியியலாளர்) கூட்டுவர்த்தக அங்கத்துவம்.

மற்றும்

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சபை, நிறுவனம் அல்லது கீர்த்தி வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் சிவில் மற்றும் கட்டமைப்பு பொறியியலில் குறைந்தபட்சம் எட்டு (08) வருடகால அனுபவம்.

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட இயைபான துறையில் சிவில் பொறியியலில் நான்கு வருட சிறப்பு இளமாணிப் பட்டம்.

மற்றும்

பொறியியல் துறையில் ஒரு கலாநிதிப் பட்டம் (Ph.d)

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சபை, நிறுவனம் அல்லது கீர்த்தி வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் சிவில் மற்றும் கட்டமைப்பு பொறியியலில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால அனுபவம்.

**கவனிக்கவும் :** இயைபுடைய துறையில் ஆராய்ச்சி பிரசுரமொன்றை வெளியிட்டிருந்தால் அது மேலதிக தகுதியாக கவனத்திற் கொள்ளப்படும்.

## முகாமையாளர் - ஆய்வுகூடம் / தொழில்நுட்பம் ஆஆ 1-1 தரம் II (04 பதவிகள்)

**வெளிவாரி :** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பொருத்தமான பாட சேர்க்கைகளுடன் இயைபான துறையில் பொறியியல் / விஞ்ஞானம் / தொழில்நுட்பவியலில் நான்கு வருட இளமாணிப் பட்டம்.

அல்லது

அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சபை, நிறுவனம் அல்லது கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் தொழில்நுட்ப அதிகாரியாக 08 வருடகால சேவை அத்துடன் ஏனு-6ஆம் நிலைக்குக் குறையாத அல்லது தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (NDT)

இயைபுடைய பரப்பில் ஆய்வுகூட பகுப்பாய்வு வேலைகள் அல்லது தர முகாமைத்துவ முறைமைத் துறையில் தகைமைக்குப் பின்னரான குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால சேவை அனுபவம்.

## கனிஷ்ட முகாமையாளர் - துளையிடல் அதிகாரி JM 1-1 தரம் II (01 பதவி)

**வெளிவாரி :** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட புவியியலை ஒரு பாடமாகக் கொண்ட மூன்று (03) வருட இளமாணிப் பட்டம். (புவிதொழில்நுட்பவியல் துறை ஆய்வில் அனுபவம் மற்றும் புவி பௌதீகவியல் அனுபவம் மேலதிக அனுகூலமாகும்)

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தகைமையில் 7ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் புவிதொழில்நுட்பவியல் துறை ஆய்வு மற்றும் புவி பௌதீகவியல் ஐந்து (05) வருட கால அனுபவம் மற்றும் NVQ 6ஆம் நிலைக்குக் குறையாத சமமான தகைமை அல்லது தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமாவில் (NDT) சித்தியடைந்திருத்தல்.

அல்லது

அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் புவிதொழில்நுட்பவியல் துறை ஆய்வு மற்றும் புவி பௌதீகவியல் பத்து (10) வருட கால அனுபவம் அத்துடன் NVQ 5ஆம் நிலைக்குக் குறையாத அல்லது தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழில் (NCT) சித்தியடைந்திருத்தல்.

## முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பவியல் வகுதி (மின்சாரம்) MA 2-2, தரம் iii (06 பதவிகள்)

வெளிவாரி : மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் மூன்றாம் நிலை தொழில்நுட்பம் / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற் தகைமையில் 5ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரியின் தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழைப் (NCT) பெற்றிருத்தல் அல்லது அதற்குச் சமமான தகைமை.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ நிறுவனமொன்றில் ஆய்வுகூட டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

## முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பவியல் அல்லாத வகுதி (மின்சாரம்) MA 1-2, தரம் iii (06 பதவிகள்)

அ) க.பொ.த (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

i. சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்

ii. கணிதம்

ஆ) க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை :** எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு

**பொதுவான நிபந்தனைகள்:**

| | |
|---|---|
| **சம்பள அளவு** | - AR - 2 ரூபா 133,220 - 10x3600 - 169,220.00 |
| **அடிப்படை சம்பள நிலை** | - ரூபா 100,306.00 (01/2025 முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் iiஆம் அட்டவணையின் பிரகாரம்) |
| **சம்பள அளவு** | - MM 1-1 தரம் ii ரூபா 91,690 - 10x2480 - 15x3450 - 168,240.00 |
| **அடிப்படை சம்பள நிலை** | - ரூபா 71,730.00 (01/2025 முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் iiஆம் அட்டவணையின் பிரகாரம்) |
| **சம்பள அளவு** | - JM 1-1 தரம் ii ரூபா 72,650 - 10x1360 - 18x2040 - 122,970.00 |
| **அடிப்படை சம்பள நிலை** | - ரூபா 56,615.00 (01/2025 முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் iiஆம் அட்டவணையின் பிரகாரம்) |
| **சம்பள அளவு** | - MA 2-2 தரம் iii ரூபா 50,540 - 10x540 - 7x630 - 4x1080 - 20x1280 - 90,270.00 |
| **அடிப்படை சம்பள நிலை** | - ரூபா 43,379.00 (01/2025 முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் iiஆம் அட்டவணையின் பிரகாரம்) |
| **சம்பள அளவு** | - MA 1-2 தரம் iii ரூபா 46,220 - 10x540 - 7x630 - 12x1080 - 12x1280 - 84,350.00 |
| **அடிப்படை சம்பள நிலை** | - ரூபா 40,403.00 (01/2025 முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் iiஆம் அட்டவணையின் பிரகாரம்) |

**வயதெல்லை**

| | |
|---|---|
| **AR - 2** | - 30 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். |
| **MM 1-1 தரம் ii மற்றும் JM 1-1 தரம் ii** | - 22 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். |
| **MA 2-2 தரம் iii மற்றும் MA 1-2 தரம் iii** | - 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். |

உள்வாரி தகைமைகளின் பிரகாரம் உள்வாரி விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**ஏனைய நன்மைகள் :**

* வாழ்க்கைச் செலவுப் படி
* 12% EPF உரித்தாகும் மற்றும் நிறுவனத்தினால் 3% ETF பங்களிப்பு செய்யப்படும்.
* மருத்துவ விடுமுறைக்கான பணம் மற்றும் அரச சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த போனஸ்
* மாதாந்த செயலாற்றுகை ஊக்குவிப்பு
* மருத்துவ மற்றும் ஆயுள் காப்புறுதி
* தொடர்பாடல் கொடுப்பனவுகள் (தகுதியான பதவிகளுக்கு மட்டும்)
* அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நன்மைகள்

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனத்தில் பணியில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும். இயைபுடைய சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் முழுமையான சுய தரவுகள் அடங்கிய விண்ணப்பங்களை 2025 ஜுலை 30ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழே கையொப்பமிடப்பட்டவருக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தயவு செய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**99/1, ஜாவத்த வீதி,**
**கொழும்பு 05.**

tamilguru.lk